
11

யாழ். வண்ணை

செந்தில் கதிர்வேலாயுத சுவாமி கோவில்

# கும்பாபிஷேக வைபவ மலர்



294.5
யாழ்.

...அச்சகம்
... காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம் (இலங்கை)


மண்டலாபிஷேகப் பூர்த்தி தினம்
சித்தார்த்தி வருடம்
ஆவணி மாதம்
15-ம் நாள் 31-8-79

2376

294.5
WAG.

INDRAPALA COLLECTION
OF THE
EVELYN RUTNAM INSTITUTE
LIBRARY
JAFFNA

EVELYN RUTNAM INSTITUTE
266
REFERENCE
LIBRARY
JAFFNA



# "தும்பிக்கையான் புகழ்பாடு"

யாரும் வாழ்க்கையின் இன்பத்தில் இன்பத்தைப் பெறுவதிலும் பார்க்க துன்பமும், விக்னமும் நம்மையடையாத வண்ணம் பார்த்துக்கொள்வது முக்கியமாக இருக்கின்றது. இவ்விடையூறுகளை கொடுக்கவும் கெடுக்கவும் வல்லமையுடையவனே விநாயகப் பெருமான். எனவே இவனுக்கு விக்ன விநாயகன் என்று பெயர்.

இவ்விநாயகர் ரக்த விநாயகன், கிருஷ்ண விநாயகன், சுக்ல விநாயகன் என மூன்று நிறங்களாக அமையப்பெற்றவன். ரக்த விநாயகன் திருவண்ணாமலையில் குளக்கரையில் அமர்ந்திருக்கிறான். சுக்ல விநாயகனும் பாரத நாட்டின் ஓரிடத்தில் இருப்பதாகத் தெரிகின்றது. கிருஷ்ண விநாயகன்தான் பொதுவாக எங்கும் காட்சியளிக்கின்றான்.

இப்படிப்பட்ட விநாயகன் விரல்களாகிய அங்கங்கள், நகங்களாகிய உபாங்கங்கள் ஆகியவைகளுடன் கூடிய நான்கு கைகளுடையவனாக இருந்தபோதிலும், ஐங்கரனைத் தொழுவோம் என்று துதிக்கையைப் பெருமைப்படுத்திக் கூறியுள்ளார்கள். அதற்குக் காரணம் நான்கு கைகளிலும் நான்குபொருட்களை எப்போதுமே வைத்துக்கொண்டுள்ளபடியால் பக்தர்களுக்கு அருள்புரிவதற்கு விரைவில் அனுகூலமாக உள்ளது முன்னுள்ள துதிக்கையே யாகும். அஞ்ஞானத்தைமறைத்து ஞானமயமாக மாற்றப்படுவது 'மோதகம்'. கல்வியே கருந்தனம் என்பதை உணர்த்துவது தந்தம் துஷ்டர்களையடக்கி நலலோர்களைக் காப்பாற்றுவதை உறுதிப்படுத்துவது அங்குசம். என்னை வழிபடுவோரை எமபாசம் அணுகாது என்பதை உணர்த்துவது பாசம். இப்படிப்பட்ட மகிமை பொருந்தியவைகளை வைத்திருக்கும் விநாயகப் பெருமானின் துதிக்கை, கையிலும்பார்க்க சிறப்பாக கருமங்களையாற்றுவதாலும் ஊசியைக்கூட எடுக்கும் வல்லமை பெற்றிருப்பதாலும் பக்தர்களுக்கு அருள்பாலிகக விரைவில் ஈடுபடுவதினாலும், ஔவையாரை மோட்சத்திற்கு அனுப்பிவைக்க பேருதவி செய்ததினாலும் தும்பிக்கை சிறந்த கையாகப் புகழப்படுகின்றது. எனவேதான் 'நம்பிக்கையுடன் தும்பிக்கையான் புகழ்பாடு' என்று பாடினார்கள் போலும். ஆதலால் நாம் நலன்களைப் பெற தன்நம்பிக்கையுடன் தும்பிக்கையான் புகழ்பாடுவோமாக!

**வித்தியாசாகர: கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள்**

**நியாயசிரோமணி**

உ

குகமயம்

வண்ணை

# ஸ்ரீ செந்தில் கதிர்வேலாயுத சுவாமி கோவில்

எந்தாயும் எனக்கு அருள் தந்தையும் நீ
சிந்தாகுல மானவை தீர்த்து எனையாள்,
கந்தா கதிர்வே லவனே உமையாள்
மைந்தா குமரா மறை நாயகனே.

செந்தில் குமரன் வள்ளி தெய்வானை சமேத ஸ்ரீ செந்தில் கதிர் வேலாயுத சுவாமிக்கு இம்மலர் சமர்ப்பணம். "என்று தான் இம்மனிதர் என் சந்நிதானத்துக்கு வருகிருர்களோ அன்று அம்மனிதர் சம்சார சாகரக்கரை யணுகுவர்" என்று திருச்செந்தூரில் கோயில் கொண்டிருக்கும் கலியுக வரதனை இங்கு ஈழத்தில் யாழ்ப்பாண மத்தியில் எழுந்தருள வைத்திருக்கும் ஸ்ரீ செந்தில் கதிர்வேலாயுத சுவாமி கோயில் தர்மகர்த்தாக்களுக்கு நன்றி கூறி இம்மலரைச் சமர்ப்பிக்கின்றேன்.

## ஆலய வரலாறு

"திரைகடலோடியும் திரவியம் தேடு" என்ற முதுமொழிக்கிணங்க பாரத நாட்டிலிருந்து நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள் நாற்றிசையும் சென்று பர்மா, மலேசியா, சிங்கப்பூர், தென் ஆபிரிக்கா, ஈழம் முதலிய தேசங்களில் வணிகம் செய்து வந்தனர். பொருள்ஈட்டுவதில் மட்டும் கண்ணும் கருத்துமாய் அவர்கள் இராது தங்கள் ஆத்மீக ஈடேற்றத்துக்காக, தாங்கள் சென்ற இட மெல்லாம் முக்கிய நகரங்களில் தங்கள் குலதெய்வமாகிய கதிர்வேலாயுத சுவாமிக்கு ஆங்காங்கு கோயில் கட்டி வேல் வடிவத்தில் குமரனைப் பிரதிஷ்டை பண்ணி வழிபட்டு வந்தனர்.

இவ்வாறு யாழ்ப்பாணத்துக்கு வந்த நாட்டுக்கோட்டை நகரத்துச் செட்டிமார்களும் திரு. அரு. மெ. அரு. அருணுசலம் செட்டியார், திரு. அரு. க. நாச்சியப்பன் செட்டியார், திரு. பெ. வெ. பழனியப்பன் செட்டியார், திரு. கா. பெ. செல்லப்ப செட்டியார், திரு. கறு. நாராயணன் செட்டியார் ஆகியோர் தர்மகர்த்தாக்களாக இயங்கி 1879-ம் ஆண்டு சிறந்த மரவேலைப்பாடு அமைந்த மடாலயத்தை இங்கு கட்டி ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமியை வேல்வடிவத்தில் ஸ்தாபித்து வழிபட்டு வந்தனர். பின்னர் திரு. பி. கு. பைரவன் செட்டியார் திரு. பி. கு. நா. நாகப்பன் செட்டியார் முதலானேர் சேர்ந்து ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமிக்குக் கருங்கல்லால் கோவில் கட்டுவதெனத் தீர்மா

னித்து, கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம் வரை பரதநாட்டுச் சிற்பிகளைக் கொண்டு அழகிய சிற்பவேலைப்பாடுகளுடன் ஆலயத்தை அமைத்தனர். திட்டமிட்டபடி வேலைகள் பூர்த்தியாகாததனால் மிகுதி வேலைகளைக் காரையினால் சபாமண்டபம் முதலிய வேலைகளையும் மேற்குப்புறத்தில் வைரவ கோவிலையும் கட்டி முடித்து 1936-ம் ஆண்டு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமியைப் பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்தனர். அக்காலத்தில் வைகாசி விசாகம், திருக்கார்த்திகை, தைப்பூசம் ஆகிய தினங்களில் அன்னதானம் வழங்கி வெள்ளி மயில் வாகனத்தில் தங்க நகைகளால் அலங்கரிக்கப்பட்டு ஸ்ரீ கதிர்வேலாயுதப் பெருமான் விழாக்கோலம் பூண்டு வருவர்.

இன்னும் நல்லூர் கந்தசுவாமி கோவில் பத்தாம் திருவிழா அன்று நகரத்தார் அலங்கார உடைகள் உடுத்தி பட்டுக்குடைகள், கொடிகள், மகர தோரணங்கள், ஆலவட்டங்கள் சூழ கதிர்வேலாயுதசுவாமி கோவிலிலிருந்து காவடிகள் எடுத்து வண்ணை சிவன்கோவிலை வலம்வந்து காங்கேசன்துறை வீதி நாவலர் வீதி வழியாக கோலாகலமாக வருடம்தோறும் பவனி போவது ஓர் கண்கொள்ளாக் காட்சியாக அமைந்திருந்தது.

1879 ல் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி பிரதிஷ்டைபண்ணப்பெற்ற காலம் தொடக்கம் பரதநாட்டிலிருந்து இதற்கென அர்ச்சகராக பிரம்ம ஸ்ரீ வெ. பொன்னுச்சுவாமி ஐயர் வரவழைக்கப்பட்டார், அவருக்குப் பின் அவர் ஏக புத்திரன் பிரம்ம ஸ்ரீ பொ. வெங்கடராம ஐயர் அர்ச்சகராகப் பணியாற்றி வந்தார்.

காலச்சக்கரம் சுழற்சியில் 1968 ம் ஆண்டு நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள் தாயகம் திரும்பவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அர்ச்சகராயிருந்த பிரம்ம ஸ்ரீ பொ. வெங்கடராம ஐயரிடம் கோவில் நிர்வாகத்தைப் பொறுப்படைத்துவிட்டு நகரத்தார் பாரதம் திரும்பினர். பிரம்ம ஸ்ரீ பொ. வெங்கடராம ஐயர் (ராசா ஐயர்) கோவிலையும் கோவிலைச் சேர்ந்த அசைவன, அசைவற்றனவாகிய சொத்துக்களையும் தம்மால் முடிந்தவரை காப்பாற்றி பூசைகளைத் தவறாது கவனித்து வந்தார். வயதும் முதிர வருமானமும் குன்ற கோவிலைத் தம்மால் தொடர்ந்து நிர்வகிக்க முடியாமல் போய்விடுமோ என்ற ஐயம் ஏற்படவே பரம்பரையாக ஸ்ரீ கதிர்தேலாயுத சுவாமி அடியார்களாகவும் நகரத்தாருடன் நெருங்கிய தொடர்பும் கொண்டிருந்த குடும்பத்தின் வழித்தோன்றலான திரு. க. சி. தங்கராசாவை அணுகி நிலைமையை அவரிடம் விளக்கி கோவில் நிர்வாகத்தை சீர்படுத்த நடவடிக்கைகள் எடுக்கும் வண்ணம் கேட்டுக்கொண்டார்.

1975 ம் ஆண்டு மே மாதம் யாழ்ப்பாண மாவட்ட நீதிபதிக்கு வண்ணை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில் நிர்வாகம் தொடர்ந்து நல்ல முறையில் நடத்த முடியாது இருப்பதைச் சுட்டிக் காட்டி ஒரு அறங்காவலர் குழுவை நியமித்து, நிர்வாகத்தை அவர்களிடம் ஒப்படைக்கும் வண்ணம் மனுவில் வேண்டிக்கொண்டனர். மாவட்ட நீதிபதி மனுவைப் பரிசீலித்து விசாரணை

நடத்தி 18-8-75 அன்று பின்வருவோரைக் கொண்ட அறங்காவலர் குழுவை நியமித்து கோவில் நிர்வாகத்தையும் அக்கோவிலுக்குச் சொந்தமான சகல அசைவன அசைவற்றவனவாகிய சொத்துக்களையும் ஒப்படைக்கும்படி கட்டளை யிட்டார்.

அறங்காவலர் குழுவில் திரு. க. சி. தங்கராசாவுடன், கோவிலுக்கு அண்மையில் நெடுங்காலம் வசித்து கதிர்வேலாயுத சுவாமி அடியார்களாக இருந்த குடும்பத்தினரின் வழித்தோன்றிய திரு. மு. பாலசிங்கம், திரு, சி. தியாகராஜா, அக்கால சைவபரிபாலனசபைத் தலைவருமான திரு. த. சோம சுந்தரம், வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் சைவபரிபாலன சபை ஆகியவற் றுடன் நெருங்கிய தொடர்புகொண்ட குடும்பத்தின் வழித்தோன்றிய திரு. சி. செ. சோமசுந்தரம், திரு. வெங்கடராம ஐயரின் மருகருமான பிரம்ம ஸ்ரீ ப. சுப்பிரமணிய ஐயர் ஆகியோர் இடம்பெற்றனர்.

மேற்படி அறங்காவலர் குழு முழுப் பொறுப்பையும் நீதிபதியின் கட் டளைப்படி 18-8.75 அன்றே பொறுப்பேற்றுர்கள். அன்று முதல் இவர்கள் தர்ம கர்த்தாக்களாகச் செயற்பட்டு படிப்படியாக நிர்வாகத்தைச் சீராக்கி, ஆலயத் தைப் புனரமைத்து பரத நாட்டு மகா பல்லபுரம் சிற்ப கலாசாலையில் சிற்ப சாஸ்திரி கணபதி ஸ்தபதியைக் கொண்டு திருச்செந்தூர் ஆலயத்திலுள்ள முருகன் போல வள்ளி தெய்வயானை சமேத கதிர்வேலாயுத சுவாமியைக் கருங் கல்லில் வடிப்பித்து வரவழைத்தனர். மேலும் 'மகாமண்டபத்தில் இதுகாறும் வீற்றிருந்த விநாயகப் பெருமானுக்கும், புதிதாக ஸ்ரீதேவி, பூதேவி சமேத ராக மகாவிஷ்ணுவுக்கும் பிரகாரத்தில் தனிக்கோவில்கள் அமைத்தனர். ஸ்வஸ்தி ஸ்ரீ சித்தார்த்தி வருஷம் ஆனி மாதம் 31 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை (15-7-79) கிருஷ்ண பக்ஷ ஷஷ்டி திதியும் உத்தரட்டாதி நட்சத்திரமும் அமிர்த யோகமும் கூடிய சுபமுகூர்த்தத்தில், கன்னி லக்கினத்தில் முற்பகல் 10-02 மணி முதல் 12 மணிவரை முறையே ஸ்தூபிகள் கும்பாபிஷேகம் விநாயகர் நூதனமூர்த்தி யாகிய வள்ளி தெய்வயானை சமேத ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமிக்கும், ஏனைய மூர்த்திகளுக்கும் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. தொடர்ந்து 48 நாட் கள் மண்டலாபிஷேகம் நடைபெற்றது. இவ்வாண்டு ஆவணி மாதம் 31 ம் திகதி சஹஸ்ர சங்காபிஷேகத்துடன் இவ்வைபவங்கள் பூர்த்தி பெறும்.

இதுகாறும் மயூரம், பலி பீடம் ஸ்கந்த சண்டர் (சண்டேஸ்வரர்) இல் லாத குறையையும் நிவர்த்தி செய்து இக்கோவுலுக்கே தனி ஐதீகமாக மேற்கு எல்லையில் எழுந்தருளியிருக்கும் ஷேத்திர பாலகர் (வைரவர்) ஆலயத்தையும் புனருத்தாரணம் செய்து, வசந்த மண்டபத்தையும் பூர்த்தி செய்து, மகாமண் டபத்திலிருந்த தண்டபாணிப் பெருமானைக் கர்ப்பக்கிரக பின் புற கோஷ்டத் தில் பிரதிஷ்டை செய்திருக்கிறுர்கள். இவர்களுக்கு அடியார்கள் மிகவும் கடமைப்பாடுடையவர்களாவர்.

இதற்கெல்லாம் காரணமாயிருந்த நாட்டுக்கோட்டை நகரத்துச் செட்டிமார்களுக்கு முதற்கண் அடியார்கள் சார்பில் நன்றி தெரிவித்து, விடா முயற்சியாக ஸ்ரீ கதிர்வேலாயுதப் பெருமானின் திருக்கோவிலைப் புனருத்தாரணம் செய்து கண்கொள்ளாக் காட்சியாகக் கடைத்தெரு மத்தியில் செந்தூர் வேலனைப் பிரதிஷ்டை செய்து வைத்த அறங்காவலர் குழுவுக்கும், தினமும் ஆலயம் சென்றும், மனதாலும் வழிபடும் அடியார்களுக்கும் ஸ்ரீ கதிர்வேலன் அருள் பாலிப்பார் என வேண்டிக்கொள்கிறேன்.

பாலசுப்பிரமணியம் சிவானந்தன்

கலாநிலைய அச்சகம்,
இல. 303, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.



ட

# ஸ்ரீலங்கா யாழ். வண்ணை செந்தில் கதிர்வேலாயுத சுவாமியின் கும்பாபிஷேக வைபவம்

சூரியதேவன் மென்மையான கிரணங்களை எங்கும் பரப்பிக்கொண்டிருந்த அக்காலை வேளையிலே சித்தார்த்தி வருடம் ஆனி மீ 31-ம் திகதி (15-7-79) ஞாயிறு காலை 10-45 மணியளவில் செந்தில் வேலவன் கும்பவடிவமாகப் புறப்பட ஆரம்பித்தான். முதலில் ஸ்தூபி கும்பங்கள் புறப்பட்டு எடுபிடிகளுடன் ஸ்தூபி நோக்கிச் சென்ற காட்சி மனதை மிகவும் பக்திபரவசமாக்கியது. சிவஸ்ரீ சு. கைலாசநாதக் குருக்கள் (பாப்பாக் குருக்கள்) அவர்கள் செந்தில் வேலவன் ஸ்தூபியிலும், சிவஸ்ரீ த. சுப்பிரமணியக் குருக்கள் அவர்கள் விநாயகர் ஸ்தூபியிலும், சிவஸ்ரீ ந. சபாரத்தினக் குருக்கள் அவர்கள் மஹாவிஷ்ணு ஸ்தூபியிலும் ஆரோகணித்து நியாசங்களைச் செய்ய ஆரம்பித்தனர். சுமார் 15 நிமிடம் வரை பூஜை நடைபெற வேலவனின் மயில்தோகை மறைத்தது போன்று, சூரிய தேவன் தனது கிரணங்களை மேகங்களில் மறைத்துக்கொண்டிருந்த அக்காட்சி பார்ப்பவர் மனதையும் கண்ணையும் பரவசமாக்கிக்கொண்டிருந்தது. வருண பகவானும் மழைத்தூற்றல் இட்டு பக்தர்களை ஆசீர்வதித்தார்கள். பக்தர்கள் எல்லோரும் கோவில் நாற்புறமும் புடைசூழ நின்று மூன்று ஸ்தூபிகளிலும் ஓரே சமயத்தில் நடைபெற்ற அவ்வினிய காட்சியைக் கண்டுகளித்துக் கொண்டிருந்தார்கள்.

பின்பு மூர்த்தி கும்பங்கள் புறப்பட்டு வேத பாராயணம் திருமுறை ஓதுதல், மங்களவாத்திய சகிதம் வீதிவலம் வந்து விநாயகர், செந்தில் முருகன் மஹா விஷ்ணு ஆகிய மூர்த்திகளுக்கு மங்கள கோஷங்களுடன் குருக்கள்மார் வேதங்கள் ஓத குறிப்பிட்ட முகூர்த்தத்தில் கும்பாபிஷேகம் இனிது நிறைவேறியது. கும்பம் என்னும் சொல்லைக் கூறும் பொழுதே நீர் நிரம்பியதும், புஷ்பமாலைகளால் அலங்கரிக்கப்பட்டதும், கொடி குடை முதலிய உபசாரங்களாற் புடைசூழப்பட்டதும், மங்கள வாத்தியத் துவனிக்குள் அடங்கியதுமான மூர்த்தியில் ஒடுங்குவதற்கு ஆரவாரத்துடன் கூடிய தெய்வீகக் காட்சி எம் கண்முன் நிற்கிறது. எனவேதான் கும்பம் வருகின்றது விலகுங்கள். கும்பத்தில் மாலையைப் போடுங்கள், குடைபிடியுங்கள் என்றெல்லாம் சொல்லுகின்றார்கள்.

ஒரு பக்தனுடைய மனதில் திருச்செந்தூரிலே இச்செந்தில் வாழ் குமரன் உந்தியதையிட்டு அப்புண்ணிய பூமியிலே இம்முருகன் விக்கிரகம் உருவாக்கப்பட்டுள்ளது தெரிகின்றது. புருஷப்பிரமாணமுள்ள இம்முருகனின் தோற்றமும் அதற்கு அமைவாக வலதுபுறம் வள்ளியும் இடதுபுறம் தேவசேனையின் தோற்றமும் எந்த ஒரு கல்நெஞ்சையும் நெகிழவைக்கும் தன்மையுள்ளதாக விளங்குகின்றன. கலியுக தெய்வமென்றும், தமிழ் தெய்வமென்றும் கொண்டாடப்படும் இம்முருகன் நம் எல்லோரையும் காக்க ஒரே பிரதிநிதியாக பாரத நாட்டினின்றும் இங்கு எழுந்தருளி செந்தில் கதிர்வேலாயுதனுக நாமம் பூண்டு எழில்மிகு தோற்றத்துடன் நகரத்துச் செட்டிநாட்டவர்களால் யாழ். கடை வீதியின் மத்தியிலமைக்கப்பட்ட கருங்கல் ஆலயத்திலே நம் எல்லோருக்கும் அருள்பாலிக்க வீற்றிருக்கின்றான். ஆகவே நாம் எல்லோரும் அவனை வணங்கி அருள் பெற்று இம்மை மறுமைப் பயன்பெறுவோமாக!

கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள்

நல்லூர்

# "கதிர் வேலவன்"

'அஞ்சுமுகந் தோன்றி லாறுமுகந் தோன்றும்
வெஞ்சமரி லஞ்சலென வேல்தோன்றும்'' —என்ற

நக்கீரர் வாக்கின்படி எம்மை யெல்லாம் எவ்வித ஆபத்துக்களிலும் மூழ்கவிடாது காத்தரு ளும் கதிர்வேலவனைச் சிறிது சிந்திப்போம்!

ஆன்மாக்களாகிய எமக்கெல்லாம் முத்தி கொடுக்க விரும்பும் விருப்பையுடைய இச்சா சக்தியும் அவ்விருப்பங்களுக்கெல்லாம் அறிவையுணர்த்தும் ஞானசக்தியும், அறிந்தவற்றைச் செயலில்செய்யும் கிரியாசக்தியுமாகிய மூன்றுசக்திகளையும் அடக்கியதே முருகனின் வேலாகும்.

பல்சிறப்பெல்லாம் பெற்றுள்ள வேல் உருவத்தையோ, இச்சாசக்தியுடனும் கிரியா சக்தியுடனும் கூடிய ஞானசக்தி வடிவமாகிய முத்துக்குமார வடிவத்தையோ வல்லீ (தேவ சேனசமேத சுப்பிரமணிய உருவமாக) கர்ப்பக்கிரகத்தில் ஸ்தாபித்து கதிர்வேலவன், கார்த்திகை மைந்தன். கந்தன் என்றெல்லாம் போற்றி வழிபடுவதே இந்துக்களாகிய எமது தியான வழிபாட்டு முறையாகும். இவ்வாறு உருவத் திருமேனிகொண்ட இறைவனை பிரதிஷ்டை செய்து முதலில் ஜலத்தில் ஆவாகித்துப் பின் கும்பவடிவமாகிய அவ்விறைவ னுக்கு அக்னி மூலமாக உபசார பூஜைகள், நிவேதனங்கள் முதலியவற்றை அளித்து மூலஸ் தானத்தில் ஸ்தாபிக்கப்பட்ட வல்லீ தேவசேன சமேத சுப்பிரமணியப் பெருமானை வேத கோஷங்களுடன் ஒளி, ஒலி, ஜலவடிவங்கள் மூன்றையும் ஒன்றாக்கியதே இக்கும்பாபிஷேகம் என்னும் பெரும் கைங்கரியமாகும். உண்மையிலேயே இப்படிப்பட்ட ஓர் சிறப்புவாய்ந்த யாழ். வண்ணை செந்தில் கதிர்வேலாயுதப் பெருமானைத் தரிசிக்கும் போது கலை அம்சங்கள மைந்த இவ்விக்கிரகங்கள் எம்மைப்பத்திப்பிரவாகத்திலாழ்த்துகின்றன,

ஞானம், வைராக்கியம், வீர்யம், ஐஸ்சுவரியம், செல்வம், கீர்த்தி என்னும் ஆறு குணங்களும் பொருந்தியவன் பகவானாகத் தோன்றுகின்றான் என நூல்கள் கூறுகின்றன மேலும் இவ்வாறுகுணங்களுள் எதாவது ஒன்று சிறப்பாக அமைந்துவிட்டால் சாதாரண ஜீவன் ஒருவன் பெருமகனாகிவிடுகிறான். இத்தெய்வ மகிமைகள் ஆறும் ஒன்றுசேர்ந்து பிர காசிக்குமானால் அவன் முருகனாக ஆகிவிடுகிறான்.

இங்கு நாம் போற்றி வணங்கும் கதிர்வேலவனைப் பற்றிச் சிறிது நோக்குவோம் சுய ஒளியுள்ள பொருள் எதுவோ அது தான்மட்டுமல்ல மற்றவற்றிற்கும் கதிர் (ஒளி) வீசு கின்றது. இருளை நீக்கும் இயல்பு அதற்குண்டு. சுய ஒளியினிடத்தில் இருளைக் காண முடி யாது. ஞானமும் இத்தன்மைத்தே ஞானரூபமானவன் சுப்பிரமண்யன். ஞானசக்திவடிவ மானவனும் அவனே! ஞானசக்தியே வேலாயுதமாகும். கெட்ட செய்கைகள் யாவற்றிற்கும் அடிப்படையானது அக்ஞானமாகிய அறிவின்மையாகும். இவ்வஞ்ஞானத்தை நீக்கவல்லது ஞான ஒளியாகும். ஞான ஒளிவடிவமாகிய கதிர்வேலவன் (ஞானபண்டிதனாக) சக்திகளுடன் கூட அருள்மிகுந்து காட்சியளிக்கிறான். கலியுகவரதனாகும் இக்கதிர்வேலவனை இக்கலியுகத் தில் கலிக்கஷ்டங்கள் நீங்க நாமெல்லாம் காலையும் மாலையும் போற்றி வழிபடுவதால் எம் வினைகளெல்லாம் நீங்கி பேரின்பப் பெருவாழ்வு பெறுவோமாக!

''எந்தா யுமெனக் கருள்தந் தையுநீ
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்
கந்தா கதிர்வேலவனே யுமையாள்
மைந்தா குமரா மறைநா யகனே''

சமஸ்கிருத பண்டிதர்: கி. சதாசிவ சர்மா
ஆசிரியர் யாழ் / சிவானந்த குருகுலம்

# விஷ்ணு பரமாத்மா

ஜீவாத்மாவாகிய நாங்கள் இம்மையின் சுகத்தையும் வேண்டியனுபவிப்பதற்கே இனிப் பிறவாநிலை வேண்டும் எனக் கருதுகின்றோம். இம்மையில் சுகத்தையும் பிறவாநிலையைப் பெறுவதற்கும் நாம் அன்றாடம் வழிபடும் தெய்வங்களுள் விஷ்ணுபரமாத்மா மிக முக்கியமான இடத்தைப் பெறுகின்றார். நெல், கரும்பு, பருப்புவகை முதலிய எல்லா உணவையும் நமக்குத் தந்துதவும் பூமாதேவியை இரு கைகளாலும் தொட்டுக் கண்ணில் ஒற்றிப் பூமாதேவியே! நான் எனது கால்களை உனது தலைமேல் வைக்கப்போகின்றேன். அதை மன்னித்துக்கொள் என்று முதலில் பிரார்த்திக்க வேண்டும். பின் இரு கைகளையும் விரித்துத் தரிசிக்க வேண்டும். கையின் நுனியில் லக்ஷ்மியும் கையில் அடியில் சரஸ்வதியும், நடுவில் (உள்ளங்கை) கோவிந்தனும் வசிப்பதாக வேதாகமங்கள் கூறுகின்றன. ஆதலினால் காலையில் பூமிதேவி வணக்கமும் கரதரிசனமும் இன்றியமையாதன.

அதன்பின் நாம் பல்துலக்க ஆரம்பிக்கும்போதும் ஆலம் விழுதால் பல் துலக்குவது மிக முக்கியமானது. அம்மரத்தின் அடியில் பிரம்மதேவனும், நடுவில் விஷ்ணுவும், நுனியில் ருத்திரனும் வீற்றிருப்பதாக வேதங்கள் கூறுகிறபடியால் அம்மும்மூர்த்திகளையும் தியானித்த பின்பே ஆலங்குச்சியால் பல்துலக்க வேண்டும். பின் ஸ்நானம் செய்யும்போதும் கங்கை, ஜமுனை முதலிய நதி தேவதைகளை ஸ்நானம் செய்யும் நீரில் சாந்நித்யமாகப் பிரார்த்தித்துக்கொண்டு ஸ்நானம் செய்யவேண்டும், ஸ்நான அனுட்டானங்களை முடித்துக் கொண்டு ஆரோக்கியத்திற்காக சூரிய நாராயணனைப் பிரார்த்திக்க வேண்டும். பின் பூஜைகளை முடித்துவிட்டு சாப்பிடும்போது இலையில் வைக்கப்பட்ட அன்னத்தை நோக்கிப் "அன்னலக்ஷ்மியே எனக்குக் கிடைத்ததுபோல மக்கள் யாவருக்கும் திருப்தியாக அன்னமளிக்கவேண்டும் என்று வேண்டியபின்பே சாப்பிடவேண்டும்.

இவ்விதமாக அன்றாட வாழ்க்கையில் பூமாதேவி, மஹாலக்ஷ்மி, யமுனை, விஷ்ணு சூரியநாராயணன் என ஆங்காங்கு நின்று விஷ்ணுபரமாத்மா நம்மையெல்லாம் காப்பாற்றுகின்றான். அவனடி பணிவோமாக!

கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள்
அதிபர், சிவானந்த குருகுலம்.

EVELYN RUTNAM INSTITUTE
266
REFERENCE LIBRARY

# ஆறுபடை வீடுகள்

## திருச்செந்தூர்

இத்தலம் நீலத்திரைகடல் ஓரத்திலே நித்தம் தவம்செய்வதற்கு வாய்ப்பமைந்து விளங்குவது. இதன் பழைய நாமம் திருச்சீரலைவாய். மிகப் பழமையான ஸ்தலம் என்பதற்குச் சான்றுகள்:-

''வெண்டலைப் புணரி அலைக்கும் செந்தில்'' — புறநானூறு
''திருமணி விளக்கின் அலைவாய்'' — அகநானூறு
''சீர்கெழு செந்தில்'' — சிலப்பதிகாரம்
''உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்

அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே'' — திருமுருகாற்றுப்படை

அலைவாய், செந்தில், செந்தி, செந்தூர் என்பன இத்தலத்தின் மறுபெயர்கள், முருகப் பெருமானின் கருணைநிறைந்த தலங்களில், கலியுகத்திலும், கைமேற் பயனளிக்கும் தலம் இதுவே. அலைவாயில் கந்தமாதன பருவத்தைக் குடைந்து இக்கோவில் கட்டப்பட்டுள்ளது. கந்தமாதன பருவதம் நுரைமணத் கல்மலையாகும். இக்கோவில் இப்பொழுது கருங்கற் பணியாகப் புதுப்பிக்கப்பெற்றுள்ளது. செந்தில் ஆண்டவன் நின்ற திருக்கோலமாக ஒரு திருமுகமும், அபயம், வரதம், தாமரைப்பூ, ஜெபமாலை இவற்றை ஏந்திய நான்கு திருக்கரங்களையும் கொண்டு கிழக்குநோக்கிக் காட்சி வழங்குகிறார்.

ஆதிசங்கரர் தரிசித்து சுப்ரமண்ய புஜங்கம் என்னும் வடமொழி ஸ்தோத்திரத்தையும், அருணகிரிநாதர் திருப்புகழ் பாடியும் அருள்பெற்ற ஸ்தலமிதுவே ஆகும். குமரகுருபர சுவாமிகள் ஊமை நீங்கப்பெற்று கந்தர் கலிவெண்பாவைப் பாடியருளினர் என்பது தமிழுலகத்துக்கு நன்கு தெரியும். ஒருமுறை தரிசித்தால் மனநிம்மதியும், முருகனருளும், ஆசியும் பெறலாம்.

இங்குதான் முருகன் சூரனை வதம் பண்ணினர். இங்கு நடைபெறும் முக்கிய திருவிழாக்களுள் ஆவணி ஸ்கந்தஷஷ்டி, மாசி, வைகாசி விசாகம், மிகவும் பிரசித்திவாய்ந்தவையாகும். தினசரி எல்லா மூர்த்திகளுக்கும் வெள்ளி தங்க அங்கிகள் சாத்தப்படுகின்றன.

இங்குள்ள தீர்த்தங்கள் ஸ்தலத்துக்கு முன்னுள்ள கடலுக்கு வதனாரம்ப தீர்த்தம் என்றும், வடக்கே கடலிலேயே தெய்வானை தீர்த்தம், லக்ஷ்மி தீர்த்தம், சித்த தீர்த்தம், அட்டதிக்கு பாலகர் தீர்த்தம், காயத்திரி தீர்த்தம், சாவித்திரி தீர்த்தம், சரஸ்வதி தீர்த்தம், ஐராவத தீர்த்தம், பைரவ தீர்த்தம் என்ற ஒன்பது தீர்த்தங்கள் உள்ளன. வதனாரம்ப தீர்த்தத்திற்கு தெற்கே வள்ளிநாயகி தீர்த்தம், துர்க்கா தீர்த்தம், ஞானதீர்த்தம் சத்ய தீர்த்தம், ரிஷி தீர்த்தம், தேவ தீர்த்தம், பாபவிநாச தீர்த்தம், கந்தபுஷ்கரணி, சேது தீர்த்தம், தசகங்கா தீர்த்தம், கந்தமாதன தீர்த்தம், மாதிரு தீர்த்தம். பிதுரு தீர்த்தம், என்ற பதின்மூன்று தீர்த்தங்கள் உள்ளன. இவற்றில் நியமப்படி மூழ்கி வழிபட்டால் எல்லா நன்மைகளையும் எய்தலாம்.

## திருப்பரங்குன்றம்

மதுரைக்கு மேல்பாலுள்ள ஸ்தலமாகிய திருப்பரங்குன்றம் இரண்டாவது படைவீடாகும். முருகப் பெருமான் சூரபத்மன் வதத்துக்குப்பின் திருப்பரங்குன்றத்தை அடைந்தார். அங்கு தவஞ்செய்துகொண்டிருந்த பராசமுனிவர் புத்திரர்கள் ஆறுபேரும் முருகனை

வணங்கி ''இந்த இடம் மிகச் சிறந்தது; தேவரீர் இங்கேயே எழுந்தருளவேண்டும்'' என வேண்டிக்கொண்டனர். அதற்கிணங்க தேவதச்சன் அமைத்த கோவிலில் சிற்சபையில் திவ்ய சிம்மாசனத்தில் எழுந்தருளினுர். இங்குதான் இந்திரன் தன் மகளை தாராதத்தஞ் செய்து கொடுத்து தெய்வயானையம்மை திருமணம் நடைபெற்றது.

## திருஆவிநன்குடி

இத்தலம் பழனி என வழங்குகிறது. மூன்ருவது படைவீடு இத்திருஆவிநன்குடி, இக்குன்றத்தின் உச்சியில் கோவில்கெகண்டு எழுந்தருளியிருக்கும் முருகன் தண்டபாணித் திருக்கோலத்தில் காட்சிவழங்குகிருர். முருகனுக்கு எப்போதும் இடைவிடாது அபிஷேகங்கள் நடந்துகொண்டே இருக்கும். பழநி பஞ்சாமிருதம், முருகன் திருமுடியில் அப்பி வைத்த சந்தனம் அளவிடமுடியாத ஆற்றலும் மகிமையும் மிக்கவை.

மாதுளம் பழம் காரணமாக இங்கு எழுந்தருளிய முருகனின் வரலாற்றைக் குறிப்பாக தற்பொழுது பழநி என்றும், சங்க நூல்களில் பொதினி என்றும் பெயர் வழங்கிற்று.

''முழவறழ் திணிதோள் நெடுவேரைவி பொன்னுடை நெடு நகர்ப் பொதினி''
''முருகன் நற்போர் நெடுவேளாவி அறு கோட்டியாங்கண் பொதினி யானை''

என அகநானூற்றுள் பல இடங்களில் பேசப்படுகிறது, மாதுளம் வித்துகள் பல பொதிந்த முடிச்சுப்போலதனின் — பொதினி என இத்தலம் வழங்குகிறது

பழநி அடிவாரத்தில் உள்ள தலமே திருஆவிநன்குடி என்பர். இங்குள்ள முருகன் அருணகிரிநாதரால் பாராட்டப் பெற்றவர். அடிவாரத்தில் முருகன் தெய்வயானை அம்மையாராகிய ஒரு அம்மையோடு எழுந்தருளி இருக்கின்ருர். இதையே திருமுருகாற்றுப்படையில் ''தாவில் கொங்கை மடந்தையொடு சின்னுள், ஆவிநன்குடி அசைதலும் உரியன்'' குறிப்பிடப்பட்டிருக்கிறது தெளிவாகிறது.

## திருஏரகம்

திருமுருகாற்றுப்படையின்படி இது நான்காவது படைவீடு. இத்தலம் இப்பொழுது கும்பகோணத்துக்கு அண்மையிலுள்ள சாமிமலையாகும், இக்குன்றத்தின் மேலுள்ள கோவிலுக்கு பிரபவ முதலான அறுபது ஆண்டுகளும் படிகளாக அமைந்துள்ளன. முருகன் நின்ற திருக்கோலத்தில் கம்பு ஊன்றி தண்டபாணி நிலையிலேயே எழுந்தருளியிருக்கின்ருர். ஒரு முகம், இரண்டு கரங்கள் உடைய பாலசுப்பிரமணியக் கடவுள் நிலை என்றும் சொல்வதுண்டு. எமது நாட்டில் தண்டபாணித் தெய்வத்தின் முன் திருமணம் செய்துகொள்வதில்லை. அவரை உக்ரமூர்த்தி எனக் கருதுவர். ஆனுல் சாமிமலையில் பல்லாயிரம் கல்யாணங்கள் நடைபெறுகின்றன. இதற்கென கல்யாண மண்டபமும் அமைத்துள்ளனர். இத்தல மூர்த்திக்கு சாமிநாதன் என்றும் கூறுவர். தகப்பனுக்குப் பிரணவத்தின் பொருளை உபதேசித்த ஸ்தலமாகையால் சாமிநாதன் எனப் பெயர் வழங்குகிறது. இங்கு விசேஷ திருவிழாக்கள் செவ்வாய், வெள்ளி, விசாகம், கார்த்திகை, பூசம், ஷஷ்டி ஆகிய நாட்களில் சிறப்பாக நடைபெறுகின்றன.

## குன்றுதோருடல்

இது ஐந்தாவது படைவீடு. எங்கெல்லாம் மலையுண்டோ அங்கெல்லாம் முருகன். இவ்வகையில் பல ஸ்தலங்க்ள்.

அருணகிரிநாதர் கனிந்து திருப்புகழ் பாடிப் பேரருள் பெற்றது குன்றக்குடியில். வீரமருத பாண்டியனின் பிளவை நோய் நீக்கியருளியதும் குன்றக்குடியிலே. இத்தலம் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ளது.

திமலைக் குமாரசாமி திருக்கோவில், திருக்குற்றாலத்துக்கு வடமேற்குத் திசையில் இவ்வாலயம் இருக்கிறது. பழந்தமிழ் நூல்களில் காவிமலை என்று போற்றப்படுவது இத் திருமலையே. அகஸ்தியர், சப்தகன்னிகைகளும் முருகப்பெருமானை வழிபட்டு திருவருள் பெற்றனர். அருணகிரிநாதர் இத்தலத்தைத் தரிசித்துப் பாடி அருள் பெற்றார்.

மேலும் இலஞ்சி, சிவகிரி, மயிலம், திருத்தணிகை, வள்ளிமலை, திருவேங்கடம், விராலிமலை முருகன் எழுந்தருளியுள்ள சிறந்த மலைகள். திருத்தணிகையில் முருகன் வள்ளி நாயகியுடன் மணக்கோலத்துடன் வீற்றிருக்கின்றார்.

## பழமுதிர் சோலை

இது ஆறாவது படைவீடு. அழகர் மலையென வழங்குகிறது. சிலப்பதிகாரத்தில் மதுரைக்கு வழிக்கொள்ளும் கோவலன் கண்ணகி கவுந்தி முதலியோர்க்கு வழிகூறும் மாங் காட்டு மறையோன், அழகர் மலைப் பக்கத்தில் புண்ணிய சரவணம், பவகாரணி, இஷ்ட சித்தி என மூன்று பொய்கைகள் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருககின்றது. சரவணம் என் பது முருகனுடைய தீர்த்தத்தின் பெயர் என்பதில் ஐயமில்லை. இந்த ஸ்தலம் இன்று முருகன் ஸ்தலமாக இல்லை, கள்ளழகர் கோவிலாக விளங்குகிறது. மதுரையிலிருந்து பன் னிரு கட்டை தொலைவில் உள்ளது. காடும், காவும் அருவியும், குன்றும், இன்றும் காண் போர் மனத்துள் கந்வேள் அருவ நிலையை அறிவிப்பன.

திருமுருகாற்றுப்படை இம்மலையின் மாட்சியையும் காட்டின் கவினையும் கூறிக் கந்தவேளை நினைவூட்டுகிறது.

பிரம்ம ஸ்ரீ ப. சுப்ரமண்ய ஐயர்,
அறங்காவலர்
வண்ணை ஸ்ரீ செந்தில் கதிர்வேலாயுத சுவாமி கோவில்.



# ஈழத்திலுள்ள முருகனின் ஸ்தலங்கள்

## கதிர்காமம்

செந்தமிழ் நாடும்—ஈழமும் தாயும் சேயும் போன்றவை. திருநெல்வேலி, வைத்தீஸ்வரன் கோவில், வண்ணார்பண்ணை, நல்லூர், இங்கும் உண்டு அங்கும் உண்டு. ஆகவே தமிழ்த் தெய்வம் தாய்நாட்டிலும் சேய்நாட்டிலும் விளங்குகின்றார். இவ்வகையில் முருகன் எழுந்தருளியிருக்கும் ஸ்தலங்கள் பல. அவற்றுள் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தவை கதிர்காமம், செல்வக் கதிர்காமம், செல்வச் சந்நிதி, நல்லூர்க் கந்தஸ்வாமி கோவில், மாவிட்டபுரம், கந்தவனம் முதலியன ஈழநாட்டில் பெரும்பாலும் ஞானசக்தியாகிய வேலாயுதத்தை வைத்தே வழிபடுவது வழக்கம். மலையும் மாணிக்கக் கங்கையும் வனவிலங்குகளும், மலைப்பாம்புகளும், புதரும் பூண்டும் செறிந்த இடத்தில் அச்சம் விளைவது இயற்கை. அச்சத்திலிருந்து உய்திட அண்டவன் அருள்புரிவதற்காக இவ்வியற்கை வனப்புடைய கதிர்காமத்தில் கந்தன் எழுந்தருளியுள்ளான்.

கதிர்காமத்தில் முருகன் கோவில் செப்போடு வேய்ந்த சிறிய கொட்டகை வடிவாக அமைந்துள்ளது, கோவிலின் முன்வாயிலில் அடுக்கடுக்காகத் திரைகள் தொங்கவிடப் பட்டுள்ளன. அவை ஏழு திரைகள் என்று சொல்கிறார்கள். நமது ஊனுடம்பாலயத்திலும் மூலாதாரம் முதலாக ஆக்ஞை ஈறாக ஆறு வாயில்களும் அதில் ஆறு திரைகளும் தொங்கிக்கொண்டிருக்கின்றன. ஏழாவது திரைதான் துவாத சாந்தமாகிய ஒளித்திரை. இத்திரையைக் கடந்து ஆனந்த முருகனுடைய அக்கரவடிவாகிய அருளுருவத்தைக் காணலாம்.

கதிர்காமம் மிகப் புனிதமான இடம். பொல்லாத வினைகளில் புத்தி அழுந்தாமல் முருகன் நல்லருளையே நாடி நிற்றற்குரிய இடம். இத்தல அமைப்பே முக்கோண வடிவமானது. விந்துஸ்தானத்தில் முருகப் பெருமானும் கோணத்தின் நுனியில் வள்ளிநாயகியாரும், இடதுபக்க் கோணத்தில் தெய்வயானை அம்மையாரும் திருக்கோவில் கொண்டிருக்கின்றனர். பக்கத்தில் மாணிக்க கங்கை ஓடிக்கொண்டிருக்கிறது. இத்தலத்தில் ஆடிமாதத்தில் நடைபெறும் விழா மிகச் சிறப்புவாய்ந்தது. இவ்விழாவில் தினமும் யந்திரவடிவம் அமைந்த பேழையை அலங்கரிக்கப்பட்ட யானைமேலேற்றி வள்ளியம்மை ஆலயம் வரை எடுத்துச் சென்று அங்கும் திரையிடப்பட்ட கர்ப்பக்கிரகத்துள் வைத்துவிட்டு சிங்கள வேடர் மரபைச் சேர்ந்தவர் நடனம் அடிப் பின் பவனியாக எடுத்துவருவார்கள். தீர்த்தோற்சவத்தன்று இப்பேழை மாணிக்க கங்கையில் நீராட்டப்பட்டு எடுத்து வரப்படும். இதனை சிங்கள மக்கள் நீர்வெட்டு விழா என்பர். பேழையை நீராட்டுமுன் இங்கு பூஜை செய்யும் கப்புராளை வாழினால் கங்கை நீரை முக்கோண வடிவத்தில் வெட்டி அவ்விடத்தில் பேழையை நீராட்டுவர். அந்த புனித நேரத்தில் அடியார்கள் தமிழர்...சிங்களவர்கள் என்ற பேதமின்றி எல்லோரும் மாணிக்க கங்கையில் நீராடுவர். பாரதத்தில் உள்ள கங்கையில் நீராடிய பலன் அவ்வேளையில் மாணிக்க கங்கையில் நீராடியவர்களுக்குக் கிடைக்கும் என்பது மரபு.

கதிர்காமத்தில் வழிபாடாற்றுபவர்கள் சிங்கள வேடமரபைச் சேர்ந்த கப்புராளைகள். வள்ளிநாயகியுடைய மரபினர் என்றும் சொல்லுகிறார்கள். இவர்கள் பக்திநெறிதான் சிறந்தது. ஆசாரம் என்பது அவர்களுக்குத் தெரியாது.

**தெய்வயானை அம்மையாரின் திருக்கோவிலைப் பூசிப்பவர் வடநாட்டு அந்தணர். பாபா என்று அழைக்கிறார்கள். அவருக்கு உடந்தையாக சிவப்பிராமணர்கள் வேதாகம**

முறைப்படி அபிஷேக ஆராதனை நடத்துகின்றனர். இத்தலத்தில் பூஜைபண்ணுபவர்கள் வாயைத் துணியால் கட்டிக்கொண்டே கிரியைகள் செய்வர்.

மாணிக்க கங்கை ஓரமாகக் காட்டினுள் சிலகட்டை தூரம் சென்றால் வள்ளியை யானை வெருட்டிய பாறை, அதற்கு மேற்கே செல்லக்கதிர்காமமும், மாணிக்க விநாயகர் கோவிலேயும் காணலாம். விழா நாட்களில் ''அரோகரா'' கோஷமும் ''கதிர்காம தெய்யோ'' என்ற கோஷமும் ஒருங்கே சேர்ந்து ஒலிக்கும் இவ்வொலிகள் ஆன்மீக ஈடேற்றத்துக்கு உறுதுணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ்களில் பலவிடத்தும் கதிர்காமத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

''வனமுறை வேடன் அருளிய பூசை மகிழ் கதிர்காமம் உடையோனே''
''கதிர்காமம் உற்றுவளர் சிவசமய அறுமுகா''
''சொந்தக் குறமகள் கணவா திறல்சேர் கதிர்காமா''
''வாரணம் மெச்ச அளித்த அயிற்ற கதிர்காமா''

என்றெல்லாம் அருணகிரிநாதர் பாடியருளியிருக்கின்றார். கதிர்காமத் திருத்தலத்தையும் மாணிக்க கங்கையையும் போற்றியுள்ளார்.

சிகண்டி என்னும் முனிவர் அகத்தியர் ஆணைப்படி கதிர்காம வழிபாட்டிற்குச் செல்லும்போது யானை ஒன்று வழிமறித்தது. சீடர்களும் பிறரும் அஞ்சினர். சிகண்டி, ஒரு வெற்றிலையை எடுத்து ''இது ஒரு வேலாகச் சென்று முருகன் திருவருளால் யானையை வெல்லுக'' என விடுத்தார். வெற்றிலை வேலாகச் சென்று தைத்தது. இறந்த யானையிலிருந்து ஒரு கந்தர்வன் வந்து தோன்றி, ''என் பெயர் ஐராவசு, வியாழன் சாபத்தால் யானையாயினேன். முருகன் திருவருளால் பழைய வடிவடைந்தேன்'' என்றனன்.

(கதிர்காம மான்மியம்)

மாதர்வச மாயுற் றுழல்வாரும் மாதவமெ ணுமல் திரிவாரும்
தீதகல ஓதிப் பணியாரும் தீநரக மீதில் திகழ்வாரே
நாத ஒளி யேநற் குணசீலா நாரியிரு வோரைப் புணர் வேலா
சோதிசிவ ஞானக் குமரேசா தோமில்கதிர் காமப் பெருமாளே!

## செல்வச் சந்நிதி

செவிவழிவந்த வரலாற்றுப்படி இங்கு பூஜை செய்யும் தாசர் ஒருவருக்கு கனவில் தோன்றிக் கதிர்வேலவன் கதிர்காமத்துக்கழைக்க, அவ்வண்ணமே கப்புராளைக்கும் தாசன் வருவான் என்றும் கனவில் தோன்றி ''தனது ஞானவேல் ஒன்றை அவரிடம் ஒப்படைக்கும் வண்ணம் கேட்டுக்கொண்டார். அதன் பிரகாரம் அத்தாசர் பெற்றுவந்து ஸ்தாபித்த ஸ்தலமே செல்வச் சந்நிதி என்பர். இத்தலம் யாழ்ப்பாணத்தில் தொண்டைமான் ஆறு என்ற இடத்தில் உள்ளது. ஸ்தல தீர்த்தமும் தொண்டைமான் ஆறே. இங்கு கதிர்காமத்தைப்போல் வாயை துணியினுல் கட்டிக் கொண்டே மீனவர் பரம்பரையைச் சேர்ந்த ஆசாரியர்கள் வழிபாடாற்றுவர்.

திருச்செந்தூரில் கல்வியறிவில்லாத முக்காணியந்தணர் பரிசாரகராக இருக்கும்கால் அவர் நிவேதனம் சமைக்கக் காலதாமதம் ஆனமையால் அவருக்குத் தலத்தார் கடும் தண்டனை விதித்தனர். வெட்குற்று அவர் தன் உயிரை மாய்க்கக் கடலில் விழுந்தார். கந்தப் பெருமான் வெளிப்பட்டு ''நீ மகா கவியாவாய். இகழ்ந்தார் அனைவரும் ஏத்துவர். அஞ்சற்க. இத்தலபுராணத்தைச் செந்தமிழ்ச் செய்யுளால் இயற்றுக'' என்று கூறி அருள்

வழங்கினர். வென்றிமலை ஐயர் கந்தவேள் அறிவித்த வண்ணம் செவ்வல் கிருஷ்ண சாஸ்திரிகளிடம் சென்று வரலாறுகளைத் தெரிந்துகொண்டு திருச்செந்தூர்ப் புராணத்தை இயற்றியருளினர். முக்காணிமாரும் பிறரும் ''பரிசாரகன் பாட்டை அரங்கேற்ற மாட்டோம்', என்று தடுத்தனர். கவியரசர் ஏட்டைக் கடலில் போட்டு விட்டு சிவயோகத்தமர்ந்து சிவபதமடைந்தார். அவ்வேடு உபய கதிர்காமம் எனப்படும் செல்வச் சந்நிதியை அடைந்தது. அங்கே முருகதாசர் என்பவர் கந்தப்பெருமான் கனவில் அறிவித்த வண்ணம் பல பிரதிகள் செய்வித்து முருகன் ஆலயங்களுக்கும், மடங்களுக்கும் அனுப்பிவித்தார். ஒரு காலத்தில் செல்வச் சந்நிதி அமைந்துள்ள கிராமம் முழுவதும் தீக்காற்று வீசியது. அதனால் பலர் அழிந்தனர். புராணம் இருந்த செல்வச் சந்நிதி தெருமட்டும் தப்பியது. அதனை உணர்ந்த அத்தெருமக்கள் இல்லங்கள் தோறும் ஒவ்வொருஏடு எழுதிவைத்துப் பரிபாலித்தனர். இவ்வரலாற்றைத் திருச்செந்தூர்ப் புராணச் சிறப்புப் பாயிரத்தால் அறியலாம்.

இப்படிச் சிறப்பு வாய்ந்த உபயகதிர்காமம் செல்வச்சந்நிதிக்கு முருக அடியார்கள் பெருந்திரளாக விழாக்காலத்திலும் மற்றும் நாட்களிலும் சென்று வழிபட்டு வருகின்றனர்.

## மாவிட்டபுரம்

ஒன்பதாவது நூற்ருண்டின் முதற்பகுதியில் வரகுணபாண்டியன் மதுரையிலிருந்து பாண்டி நாட்டை அரசுபுரிந்து வந்தான். அக்காலத்தில் அவன் ஒருமுறை இலங்கையைக் கைப்பற்றும் நோக்கமாக இலங்கையின் வடபாகத்தில் வந்திறங்கி, சிங்களத் தலைநகருக்குச் சென்று கடும்போர் விளைத்து, சிங்கள அரசனைப் போரில் வென்று, அவனிடத்திருந்து திறைபெற்றுக்கொண்டு தென்நாடு திரும்பினன். வரகுண பாண்டியன் காலத்திற்குப்பின் இலங்கையின் வடபகுதி ஒரு தனிநாடாக விளங்கியது. எனினும் பத்தாவது நூற்ருண்டின் முற்பகுதியில் முதலாம் பராந்தக சோழன் இலங்கையின் மீது படை எடுத்து வந்து தனது சேனையோடு ஊர்காவற்றுறையில் இறங்கினன். அப்பொழுது வடஇலங்கையில் இருந்த சிங்களச் சேனைக்கும் பராந்தகன் சேனைக்குமிடையில் பெரும் போர் நிகழ்ந்தது. இப்போர் நடந்த இடம் மாவிட்டபுரத்திலுள்ள வளவர்கோன் என்று முதலியார் இராசநாயகம் கூறியுள்ளார். பராந்தக சோழன் முன்னேறி நேராகச் சிங்களத் தலைநகருக்குச் சென்று சிங்கள அரசனை வென்று திரும்பினன். இக்காலம் தொடக்கம் வடஇலங்கை மிகவும் செல்வம் கொழிக்கும் நாடாக விளங்கியது. மாவிட்டபுரப் பகுதியிலுள்ள வளவர் கோன் பகுதியில் மக்களும் அரசனும் குடியேறினர்.

இஃது இவ்வாறிருக்க, சோழநாட்டிலே இருந்த தேசாதிபதி ஒருவனுக்கு மாருதப்புரவாக வல்லி என்னும் குமாரத்தி ஒருத்தி இருந்தாள். அவளின் முகத்தில் சரும நோய் பிடித்திருந்தது. இதன் விளைவாக அவள் முகம் குதிரை முகம்போலிருந்தது. அங்குள்ள வைத்தியர் ஒருவராலும் அந்நோயை மாற்றிக்கொள்ள முடியவில்லை. அதனல் தீர்த்த யாத்திரை செய்து அதனை மாற்றிக்கொள்ள உறுதிகொண்டாள். தன் ஊரினின்றும் புறப்பட்டு அங்குமிங்கும் சென்று தீர்த்தமாடித் திரிகையில் சாந்திலிங்கம் என்னும் சந்நியாசி அவளைக் கண்டனன். அவள் நிலையைக் கண்டதும் ''இவ்வியாதி பண்டிதர் ஒருவராலும் குணமாக்கத் தக்கது அன்று. நீ இப்பொழுது எடுத்த முயற்சியே உனக்குச் சுகந்தரத் தக்கது. இலங்கையில் வடமுனையிலே கீரிமலை என்று ஒரு தலமுண்டு. அங்கே உவர்ஜ்ஜல மத்தியில் சுத்த தீர்த்தமும் மலை அருவித் தீர்த்தமும் கலந்த உத்தம தீர்த்தமொன்றுண்டு. உலகத்திலுள்ள எல்லாத் தீர்த்தத்திலும் முக்கியமானது. அத்தீர்த்தத்தில் நீராடிச் சில காலம் தங்கி இருந்தால் சுகம் அடையலாம்'' என்று சொன்னர். அதைக் கேட்டு மாருதப்புரவாகவல்லி செவிலித்தாய், பணிப்பெண், போர்வீரர் முதலியோர் சூழப் புறப்பட்டுக் கீரிமலையில் வந்து இறங்கினள். அங்கிருந்து வளவர்கோன் பள்ளி இருக்குமிடத்துக்கு அண்மையில் பாசறை போட்டுக்கொண்டிருந்தாள். அவள் இருந்த இடத்தைப் பிற்காலத்தவர்

குமாரத்தி பள்ளம் என அழைப்பர். நாள்தோறும் அவள் கீரிமலையில் தீர்த்தமாடி, அதன் பயனுக அவள் சரும நோய் மாறியது. அவள் இருப்பிடத்தைச் சுற்றியுள்ள இயற்கைக் காட்சிகளைப் பார்த்து உலாவிவருவது வழக்கம். இப்படி உலாவிவருகையில் ஒருநாள் அங்கு ஓர் அரசமரத்தடியில் பெரியவர் ஒருவர் முருகப் பெருமானுக்கு விளக்கு வைத்து வழிபட்டு வருவதைக் கண்டாள். அவளும் வழிபட்டு அப்பெரியவரிடம் அக்கோவில் வரலாற்றைக் கேட்டாள். அப்பெரியவர் தன் பெயர் சடையன் என்றும் தொன்றுதொட்டு இவ்விடத்தில் வெள்ளி வேலாயுதத்தை வைத்து பரம்பரையாக வணங்கி வருவதாகக் கூறினர். இக் கிராமத்திற்குக் கோயிற்கடவை என்றும் பெயர் அப்போது நிலவியது. மாருதப்பிரவாகவல்லி பெரியவரின் அழகிய தோற்றத்தைக் கண்டு இம் முருகவழிபாட்டால் இவர் இவ்வளவு தேஜஸுடன் விளங்குகிறுர் என்று கருதி தானும் அவ்வேலை வழிபட்டு வந்தாள். தன் தந்தைச்கு ஓலை எழுதி சோழநாட்டிலிருந்து சிற்பிகளையும் கட்டிடப் பொருட்களையும், உருவச் சிலையையும் கப்பல்கள் மூலம் வரவழைத்தாள். தன் கண்காணிப்பில் கோவிலைக் கட்டி இதற்கென சோழநாட்டிலிருந்து வரவழைத்த அந்தண சீலர்களைக் கொண்டு கும்பாபிஷேகம் பண்ணிவைத்தாள், இதுகாறும் திராவிட முறைப்படி மரத்தின் கீழ் நடைபெற்ற முருக வழிபாடு, வேத ஆகம முறை வழிபாடாக மாறிற்று. கோவிலுக்கு வேண்டிய பூஜைகள் காலந்தவறுது நடந்து வருவதற்கும் அந்தணர்கள் ஜீவிப்பதற்கும் செலவுகளுக்காக நன்செய் நிலத்தையும் புன்செய் நிலத்தையும் மான்யமாக ஈழத்திலும், சோழநாட்டிலும் வழங்கினள். மாருதப்பிரவாகவல்லி அவளின் சிறந்த பக்தியால் அவள் முகத்தில கீரிமலைத் தீர்த்த ஸ்நானத்தால் ஏற்கனவே குணமடைந்த வியாதியின் வடுக்கள் யாவும் மாறி அழகிய தோற்றம் பெற்றுள். குதிரைமுகம் போல் காட்சியளித்த அவள் தோற்றம் மாறி அழகிய தேஜஸுடன் பின் விளங்கியதால் கோவிற்கடவை என்ற கிராமம் ''மாவிட்ட''புரம் குதிரை முகம் அகன்ற மாவிட்டபுரம் ஆகி மாறி இன்றுவரை இப்பெயர் நிலவிவருகிறது.

16-ம் நூற்ருண்டில பறங்கியர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினர். கோவில்களைத் தரைமட்டமாக்கினர். பெயர்களையும், மக்கள் சமயத்தையும் கத்தோலிக்க மயமாக்கினர். கந்தசாமி கோவிலை அடுத்துள்ள காணிகளின் பெயர் மத்தேசு பங்கு வளவு என வழங்குவதைக் கவனிக்கலாம். கோவிலைப் பரிபாலித்து வந்த அந்தணர்கள் சோழநாட்டிலிருந்து வந்த உருவச் சிலையை கிணற்றில் மறைத்துவைத்தனர்.

19-ம் நூற்ருண்டில் யாழ்ப்பாணம் ஆங்கிலேயர் வசப்படவே நிலைமை மாறியது. கோவில்கள் புதுப்பிக்கப்பட்டன. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலும் புதுப்பிக்கப்பட்டது. பழைய சோழநாட்டுக் கருங்கல் சிற்பவேலைகள் இல்லாவிட்டாலும் ஓரளவு சிறப்பாகக் கட்டப்பட்டது.

சோழநாட்டு அந்தணர் வழித்தோன்றல்கள் இக்கோவிலை இன்றுவரை பரிபாலித்து பழமையும் தொன்மையும் வாய்ந்த இம்முருகன் தலத்தை யாழ்ப்பாணத்தில் அருள்மிகுந்த முருகன் தலமாகப் பேணி வருகின்றனர்.

## நல்லூர்க் கந்தசுவாமி கோவில்

ஈழத்து மக்களின் பேரன்பிற்கு இலக்கான முருக ஸ்தலங்களில் இதுவும் ஒன்று. கி. பி. 14-ம் நூற்ருண்டு முதல் ஆரியச் சக்கரவர்த்திகள் ஆண்டுவந்தனர். தலைநகரம் நல்லூராகவே இருந்தது. ஆறுவது பராக்கிரமபாகுவால் அனுப்பப்பெற்ற செண்பகப்பெருமாள் என்பவன் ஆரியச் சக்கரவர்த்தியை வென்று கி. பி. 1450 ல் ''ஸ்ரீ சங்கபோதி புவனேகபாகு'' என்னும் பெயருடன் 17 ஆண்டுகள் அரசாண்டான். சிங்களப் பெயருடன் விளங்கிய செண்பகப்பெருமாள் கட்டிய கோவில் நல்லூர்க் கந்தசுவாமி கோவில். 17-ம் நூற்ருண்டில் பறங்கியர் தீயகரங்கள் இக்கோவிலையும் விட்டுவைக்கவில்லை.

18-ம் நூற்றுண்டின் நடுப்பகுதியில் இரகுநாத மாப்பாணமுதலியார் கோவிலிருந்த இடத்தில் ஒரு மடாலயத்தைக் கட்டுவித்தார். அதில் வேலை ஸ்தாபித்து வழிபட ஏற்பாடு செய்தார். படிப்படியாக மாப்பாண முதலியார் வழித்தோன்றல்கள் இக்கோவிலை ஒரு சிறந்த ஆலயமாக உருவாக்கி, இன்று மண்ணுலகத்தில ஒரு சுவர்க்கலோகமாக்கியுள்ளனர். ஆண்டுதோறும் ஆடிமாதத்தில நடைபெறும் இருபத்தைத்து நாட்கள் விழா சைவ உலகத்தில பிரசித்தி பெற்றவை.

நல்லைப் பெருமானைப் பாடிய கவிஞர்கள் அநேகர். இருபாலைச் சேனுதிராய முதலியார் நல்லை வெண்பா, திரிபந்தாதி, குறவஞ்சி, கலிவெண்பா, ஊஞ்சற்பதிகம் ஆகிய நூலகளை இயற்றியிருக்கின்ருர். வல்வெட்டி குமாரசுவாமி முதலியார் நல்லைக் கலித்துறை என்னும் செய்யுட்கள் இயற்றியுள்ளார். அவற்றுள் ஒன்று.

கல்லைக் கடையர்கள் கைவிட் டெறியக் கனன்றெழுந்து
பல்லைத் திறந்துறு மிக்கவி தெங்கின் பழமுதிக்கும்
மல்லற் பழனங்கள் சூழ்நல்லை நாதனை வந்தடைந் தோர்க்
இல்லை பிரமக் குயவன் வனைவதற் கேதுக்களே.

திரட்டியவர்
ப சுப்பிரமணிய ஐயர்
நிர்வாகஸ்தர்
சிவானந்த குருகுலம்.

EVELYN RUTNAM INSTITUTE
REFERENCE LIBRARY
JAF

# தொகுப்புரை

தும்பிக்கையான் புகழ்பாடு என்ற தலையங்கத்தில், விநாயகப் பெருமானின் தும்பிக்கை நம்பிக்கை தரக்கூடியது என்று விக்ன விநாயகன் துதியுடன் பிரம்ம ஸ்ரீ கி. சுப்பிரமண்ய சாஸ்திரிகள் இச்சிறு பிரசுரத்தை மலரச்செய்கிறார்.

பதிப்பாசிரியர் திரு. பா, சிவானந்தன் தமது சமர்ப்பணத்தில் செவிமூலம் கேட்டவைகளையும், பழைய உறுதிகளையும் ஆராய்ந்து ஸ்ரீ செந்தில் கதிர்வேலாயுத சுவாமி கோவில் வரலாற்றை எழுதியிருக்கிறார்.

சித்தார்த்தி வருடம் ஆனி மாதம் கும்பாபிஷேகம் எப்படி நடந்தது என்பதை உணர்ச்சி ததும்ப பிரம்ம ஸ்ரீ கி. சுப்பிரமண்ய சாஸ்திரிகள் விளக்கியிருக்கிறார்.

மூலமூர்த்தியாகிய ஸ்ரீ கதிர்வேலவன் பல்சிறப்புப் பெற்ற ஆறு குணங்கள் பொருந்திய பகவான் கலியுக வரதனைக் கலிகள் நீங்கத் துதித்திடுவோம். இது பிரம்ம ஸ்ரீ கி. சதாசிவ சர்மா கூற்று.

மண்டலாபிஷேக நாட்களில் உபன்யாசங்களிற் தாம் பேசிய விஷயங்களை விஷ்ணு பரமாத்மா என்ற தலையங்கத்தில் தினமும் வழிபட வேண்டியவர்கள் யாவர் என்றும் இவற்றிற்கெல்லாம் அடிப்படையாக உள்ளவர் விஷ்ணு பரமாத்மா என்றும் விளக்கியிருக்கிறார் ஸ்ரீ சுப்ரமண்ய சாஸ்திரிகள்,

ஆறுபடை வீடுகள் முருகன் திருவருள் பொலிந்த இடங்கள். இத்தலங்களின் விபரங்களைத் தந்திருக்கிறார்கள்.

ஈழத்திலுள்ள முருகத் தலங்கள் யாம் எல்லோரும் அறிந்தவையே. இத்தலங்களின் வரலாற்றைத் திரட்டி எழுதப்பட்டிருக்கிறது.

இம்மலர் எல்லா பக்தர்கள் அடியார்களுக்கும் சித்தார்த்தி வருடம் ஸ்ரீ செந்தில் குமரனுக்கு நடந்த கும்பாபிஷேகத்தை மனதில் பதிய வைத்து முருகனை தினமும் எண்ணி உருவேற்றி உலகம் உய்ய உபகாரமாக இருக்கும். ஸ்ரீ செந்தில் கதிர்வேலாயுத சுவாமி அருள் பெற்று என்றும் இன்பம் பெருக வேண்டும்.

துய்யதோர் மறைக ளாலும் துதித்திடற் கரிய செவ்வேள்
செய்யபே ரடிகள் வாழ்க சேவலும் மயிலும் வாழ்க
மெய்யகூர் மார்பு கீண்ட வேற்படை வாழ்க அன்னான்
பொய்யில்சீர் அடியார் வாழ்க வாழ்கஇப் புவன மெல்லாம்,

(கந்தபுராணம்)

EVELYN RUTNAM INSTITUTE JAFFNA
REFERENCE LIBRARY
266